**அல் ஜாமிஉல் – அஸ்ஹர் ஜூம்ஆ மஸ்ஜித் காயல்பட்டினம் ஜமாத்தார்களுக்கு,**

இம்மடல் தங்களை அல்லாஹ் எப்படி ஈமான்கொள்ள சொன்னானோ அந்த அடிப்படையில் ஈமான் கொண்டவர்களாக நீங்கள் இருக்கும் நிலைமையில் வந்தடைய பிரார்த்தித்த வண்ணம் என்னுடைய மடலை துவங்குகிறேன். அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வபரகாத்துஹு

தங்களுடைய 26.08.2006 கடிதம் 28.08.2006 அன்று கிடைத்தது. அதில் தாங்கள் பிறை சம்மந்தமான கீழ் கண்ட கேள்விகளை கேட்டிருந்தீர்கள். குர்ஆன் மற்றும் ஆதாரப்பூர்வமான ஹதீஸ் அடிப்படையில் அதற்கான பதில்கள்.

# கேள்வி எண்: 1 ஒரு பகுதியில் பார்க்கப்படும் பிறையை மற்ற பகுதியில் உள்ளவர்கள் ஏற்றுக்கொள்ளலாமா?

***2 : 189. (தேய்ந்து வளரும்) பிறைகள் பற்றி உம்மிடம் கேட்கிறார்கள். "அவை மக்க ளுக்குக் காலம் காட்டியாகவும், ஹஜ்ஜின் காலத்தை அறிவிப்பவையாகவும் இருக் கின்றன'' என்று (நபியே) கூறும். வீடுகளுக்குள் அவற்றின் பின்புறமாக வருவதில் புண்ணியமில்லை. மாறாக, இறைவனுக்கு அஞ்சுபவனே புண்ணிய வான். எனவே, வீடுகளுக்குள் அவற்றின் வாசல்கள் வழியாகவே வாருங்கள்! இன்னும், நீங்கள் வெற்றிபெறும் பொருட்டு அல்லாஹ்வை அஞ்சுங்கள்!***

சூரத்துல் பகரா வின் 189 வது வசனத்தில் கேட்க்கப்படும் கேள்வி என்ன வென்றால் **தேய்ந்து வளரும் பிறைகள் பற்றி உம்மிடம் மக்கள் கேட்கிறார்கள்?** என்பதாகும் அதற்குஅல்லாஹ் தாலாஹுவே பதிலும் சொல்லி தருகிறான். கீழ் வரும் பதிலில் **மூன்று விஷயங்கள்** குறிப்பிடப்படுகிறது.

**1. தேய்ந்து வளரும் பிறையின் நிலைகள் மனித சமுதாயத்திற்கு (மவாகீத்) தேதியை அறிவிக்கிறது.**

**2. அடுத்ததாக ஹஜ்ஜுடைய தேதியையும் அறிவிக்கிறது.**

**3.அடுத்ததாக நீங்கள் பின்புறமாக வருவதில் உங்களுக்கு புண்ணியமில்லை மாறாக இறைவனுக்கு அஞ்சுபவனே புண்ணியவான் எனவே நீங்கள் வாசல்கள் வழியாகவே வாருங்கள்**

இந்த வசனத்தை நாம் சிறிது ஆராய்ந்து பார்த்தால் ஒரு சில உண்மைகள் வெளிப்படும் மேலும் நம்முடைய கேள்விக்கும் இதில் பதில் உள்ளது. பொதுவாக பிறையை மனிதன் பார்க்கும் போது அதன் தேய்ந்து வளரும் நிலைகள் மூலம் அதனுடைய சரியான தேதியை அறியவேண்டும் என்ற உண்மையை இந்த வசனம் தெளிவாக உணர்த்துகிறது. இதன் மூலம் தேய்ந்து வளரும் அதனுடைய ஒவ்வொரு நிலையும் ஒரு தேதி தான் என்பது நிருபிக்கப்படுகிறது. மேலும் தினமும் சந்திரனின் மாறி வரும் நிலைகளை பார்த்தே தேதிகளை முடிவு செய்தார்கள் என்பது நிரூபணமாகிறது. மேலும் நபி(ஸல்) அவர்களும் அதன் தேய்ந்து வளரும் நிலையில் உள்ள அளவை வைத்துதான் பார்த்து முடிவு செய்ய சொன்னார்களே தவிர நீங்கள் என்று பார்த்தாலும் அது தான் முதல் தேதிக்கான பிறை என்று எங்கேயும் சொல்லவில்லை. புஹாரியில் **1900/*1767*. ''நீங்கள் பிறை அறிந்து நோன்பு வையுங்கள்; பிறை அறிந்து நோன்பை விடுங்கள்; அறிந்து கொள்ள சிரமத்திற்குள்ளானால் நாள்களை எண்ணிக் கொள்ளுங்கள்' என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்'' என இப்னு உமர்(ரலி) அறிவித்தார்.**

கணக்கை அறிந்து கணக்கிட்டு முன்கூட்டியே நாட்காட்டி கணிக்கமுடியாமல் இருந்த

காலத்தில் இந்த மேற்கூறிய 2:189 வசனத்தின் 3 வது பதில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. உலகில் எந்த நேரமும் இரு தேதிகள் இரு கிழமைகள் இருந்து கொண்டே இருக்கும். அதை திருக்குர்ஆனில் **அல்லாஹ் ரப்புல் மஷ்ரிகைனி ரப்புல் மஃரிபைன் அதாவது இரண்டு கிழக்கு திசைகளுக்கும் இரண்டு மேற்கு திசைகளுக்கும் நான் தான் ரப்பு என அல்லாஹ் கூறுகிறான்.** (55:17) சந்திரனில் ஏற்படும் படித்தரங்கள் நமக்கு தேதியை அறிவிக்கும் போது மேற்கூறிய 55:17 வசனத்தின் அடிப்படையில் இரண்டு கிழமைகள் உள்ளது. சந்திரன் தேதியை அறிவிக்கும் போது எந்த அடிப்படையில் முதல் தேதியை அமல் படுத்த வேண்டும்? எந்த பகுதியினர் முதலில் அமல் படுத்த வேண்டும் ? என்பதை தெளிவாக்குகிறது.

**மேலும் உங்கள் முதல் கேள்வியின் அடிப்படையில் பூமியில் வசிக்கும் பகுதிகள் உள்ளது என்பதும் தெளிவாகிறது. அது இரண்டு கிழமைகள் இரண்டு தேதிகள் கொண்ட இரு பகுதிகள் என அல்லாஹ் 55:17 வசனம் மூலம் தெளிவாக்குகிறான்.** பூமியின் சுழற்சியின் அடிப்படையில் சூரியன் கிழக்கே உதிப்பது போன்று தோன்றுகிறது. எனவே 2:189 வசனத்தின் மூன்றாவது பதிலின் அடிப்படையில் முன்வாசல்கள் கிழக்கு பகுதி என்றும், பின் வாசல்கள் மேற்கு பகுதி என்றும் தெளிவாகிறது. முன் கூட்டியே நாட்களை கணக்கிட்டு கொள்ளும் கணக்கு இல்லாத காலத்தில் பிறையை தேதியை அறிவித்தால் கிழக்கு பகுதியில் உள்ளவர்கள் தான் அந்த தேதியை முதலில் அமுல் படுத்தவேண்டும்.(நாளை முதலில் துவக்கும் பகுதியினர்) மேற்கு பகுதியில் உள்ளவர்கள் சுழற்சியின் அடிப்படையில் உரிய நாட்களையும் தேதியை முறையாக அடைவார்கள்.

**உதாரணமாக இந்தியாவில் உள்ளவர்கள் தற்போது கூறுவது போல் சவூதியில் பிறை பார்த்தாலும் நாம் அதை ஏற்றுக்கொள்ள கூடாது. நாம் இந்தியாவில் பிறை பார்த்தால் தான் நாம் நோன்பை ஆரம்பிக்க வேண்டும் என்று கூறுபவர்களுக்கும்' இந்த 2:189 வசனம் பதில் தருகிறது.** எப்படி என்றால் இந்தியா, சவூதிக்கு கிழக்கே உள்ளதால், சவூதியில் பிறை பார்க்கப்பட்டால் இந்தியா முதலில் மாதத்தை ஆரம்பித்துவிடவேண்டியதான் கட்டாயமாகும்.

**முதலில் ஒரு நாளுடைய முதல் தொழுகையான பஜ்ர் தொழுகையை இந்தியா தொழுது முடித்த பிறகு தான் சவூதி தொழ முடியும். அதே போல் தான் இந்தியா ரமலான் மாதத்தை ஆரம்பித்த பின் தான் சவூதி ரமலான் மாதத்தை ஆரம்பிக்க வேண்டும் என்பது 2:189 வசனத்தில் உள்ள மூன்றுவது விளக்கத்தின் சட்டமாகும். அல்லாஹ்வின் இந்த சட்டத்தை புறக்கணித்து விட்டு சவுதிக்கு பின்னால் சென்று நாளை ஆரம்பிப்பது வாசல்வழியாக செல்லாமல் பின் வாசல் வழியாக செல்வதாகும். என்பதை தான் இந்த 2:189 வசனம் குறிக்கிறது. எனவே உங்கள் கேள்வியின் அடிப்படையில் முன்கூட்டியே மாதங்களை கணக்கிட முடியாத காலங்களில் கூட பூமி சுழற்சியின் அடிப்படையில் முறைப்படி பிறை பார்த்த தகவலை அமல் படுத்த வேண்டும்.**

மேலும் ஹிஜ்ரா நாட்காட்டி அடிப்படையில் மாதம் என்பது 29 நாட்களிலும் முடிந்து விடும். சில மாதங்கள் 30 தேதியாகவும் முடிவு பெறும். ***சூரியனும் சந்திரனும் கணக்கின்படியே இருக்கின்றன என்ற*** 55:5 திருக்குர்ஆன் வசனத்தின் அடிப்படையிலும் ***சூரியனை ஒளி அளிப்பதாகவும், சந்திரனை ஒளியைப் பிரதிபலிப்பதாக வும் அவனே ஆக்கினான். ஆண்டுகளின் எண்ணிக்கையையும், காலக்கணக்கையும் நீங்கள் அறி யும் பொருட்டு அதற்கு(ச் சந்திரனுக்கு) பல படித்தரங்களை உண்டாக்கினான். தக்க காரணங்கள் இன்றி இவற்றை ஏக இறைவன் படைக்கவில்லை. அறிவுள்ள மக்களுக்குத் தன்னுடைய அத்தாட்சிகளை விவரிக்கிறான்.*** 10:5 என்ற வசனத்தின் அடிப்படையிலும் முடிவு செய்யும் போது முன்கூட்டியே எந்தெந்த மாதங்கள் 29 நாட்களில் முடிகிறது எந்தெந்த மாதங்கள் 30 நாட்களில் முடிகிறது என்பதை வைத்து குழப்பமே இல்லாமல் மாதங்களின் முதல் நாளை சரியாக ஆரம்பிக்க முடியும். கணக்கின் அடிப்படையில் தாங்களின் முதல் கேள்வியே எழாது.

## கேள்வி எண்.2. அப்படி ஏற்றுக் கொள்ளலாம் என்றால் அதற்கு குறிப்பீட்ட தொலைவில் உள்ளவர்கள் மட்டும் தான் ஏற்றுக் கொள்ள வேண்டுமா? அல்லது அனைத்து பகுதியினரும் ஏற்றுக் கொள்ளலாமா? இதற்குண்டான தொலைதூரம் எவ்வளவு?

முதல் கேள்வியிலேயே இதற்கான பதில் உள்ளது. வசிக்கும் பகுதிகள் இரண்டு. யார் அதை முதலில் ஏற்றுக்கொள்வது என்பது தான் பிரச்சினையே தவிர தொலை தூரம், அளவு போன்ற பிரச்சினையோ கேள்வியோ பிறை விஷயத்தில் எழாது.

## கேள்வி எண்: 3.பிறை பார்க்க முடியாத சூழலில் விஞ்ஞான கணிப்பின் அடிப்படையில் பெருநாள் நோன்பு ஆகியவை பற்றி முற்கூட்டியே அறிவிக்கலாமா?

கணக்கு தெரியாததால் தான் நாங்கள் கணக்கை முன்கூட்டியே எழுதிவைக்கும் நாட்காட்டியை தயார் செய்ய முடியவில்லை என்பதை நபி(ஸல்) கீழ்கண்ட முறையில் அறிவிக்கிறார்கள். **நாம் உம்மி சமுதாயமாவோம். கணக்கிட்டு எழுதுவதை அறிய மாட்டோம்; மாதம் என்பது இப்படியும் அப்படியும் இருக்கும்; அதாவது சில வேளை இருபத்தொன்பது நாள்களாகவும் சில வேளை முப்பது நாள்களாகவும் இருக்கும்!' என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்'' என இப்னு உமர்(ரலி) அறிவித்தார்.** புகாரி 1913. நாங்கள் உம்மி சமுதாயம். கணக்கிடும் முறை பற்றி அறியாததால் அதை எழுதவைக்க முடியவில்லை. ஏன் எழுதிவைக்க வேண்டும் என்றால் மாதம் என்பது சில சமயங்களில் 29 நாட்களாகவும், சில சமயங்களில் 30 நாட்களாகவும் இருக்கிறது. மேலும் அதற்கு மேல் நாட்களை அதிகப்படுத்தி தவறிழைத்து விட கூடாது என்பதற்காக நபி(ஸல்) தங்கள் விரல்களால் அன்றைய கணக்கு முறைப்படி அதை எழுதியும் காட்டினார்கள் என்பதையும் ஹதீஸ்களில் பார்க்கலாம். (ஆதாரம் புகாரி)

மேற்கூறிய நபி வழிப்படி கணக்கு இல்லாததால் தான் பல வருடங்களை முன்கூட்டியே கணக்கிட்டு எழுத முடியாமல் இருந்தது என்பதும் தெளிவாகிறது. மேலும் 10:5 மற்றும் 55:5 வசனத்தின் அடிப்படையில் பல வருடங்களின் கணக்கை முன்கூட்டியே அறிந்து கொள்ள முடியும் என நமக்கு அல்லாஹ் விளக்கியும் உள்ளதால் நாம் நிரூபிக்கப்பட்ட விஞ்ஞான கணக்கின் அடிப்படையில் மாதத்தின் முதல் நாள்களையும், தேவையான தேதிகளையும், இன்னும் பெருநாள், ஹஜ் போன்றவைகளையும் முன் கூட்டியே அறிவிக்கலாம் என்பது தெளிவாகிறது.

## கேள்வி எண்.4.விஞ்ஞான கணிப்பு தவறென்றால் ஹாஜிகள் அரபாவில் கூடும் தினம் நம் அனைவருக்கும் அரபா தினமா, இல்லையா? விளக்கம் தரவும்.

2:189 வசனத்தின் பதில்களில் இரண்டாவது பதிலான ஹஜ்ஜுடைய காலத்தையும் சந்திரனின் தேய்ந்து வளரும் நிலைகள் தான் முடிவு செய்யும் என அல்லாஹ் கூறிவிட்டதால் இதில் வேறு யாரும் மாற்று கருத்து கொள்ள முடியாது. என்றைய தினம் துல்ஹஜ் மாதத்தின் 9 வது தேதி என பிறையின் நிலை அறிவிக்கிறதோ அன்றைய தினம் தான் அரபா நாள். ஹாஜிகள் தவறாக கூடினால் அதற்கு இஸ்லாம் பொறுப்பேற்காது. அல்லாஹ் 10:5 வசனத்தில் பல வருடங்களின் கணக்கை நீங்கள் இதன் மூலம் அறிந்து கொள்ள முடியும் என்று கூறுவதோடு அறிவுள்ள மக்களுக்கு தன் அத்தாட்சிகளை விவரிப்பதாக வும்

கூறுகிறான். எனவே நாம் இஸ்லாம் கூறும் பயனுள்ள கல்வியை கற்று அறிவை வளர்த்துக்கொள்வது ஒவ்வொருவரின் கடமையாகும். எனவே அவர்கள் கூடுவது அரபா தினம் என்று நாம் கூற முடியாது. சந்திரனின் நிலைகளை வைத்து தான் தேதியை முடிவு செய்து அரபாவை முடிவு செய்ய முடியும்.

## 5. ஏற்கனவே கணிக்கப்பட்டு முழுமையான ஹிஜ்ரா நாட்காட்டியின் அடிப்படையில் நோன்பு பெருநாள் ஆகிய கிரியைகளை நடைமுறை படுத்தலாமா?

கணிக்கப்பட்ட ஹிஜ்ரா நாட்காட்டியின் அடிப்படையில் தான் நமது வாழ்கையின் அன்றாட தேதிகளை முடிவு செய்ய வேண்டும். தற்போது உலகில் நடைமுறையில் இருக்கிற கிருஸ்துவ மற்றும் யூத நாட்காட்டியின் அடிப்படையில் பிப்ரவரி என்ற மாதம் 28 நாட்களில் முடிவு பெறும். சில மாதங்கள் 31 ல் முடிவு பெறும். இது இஸ்லாமிய அடிப்படைக்கு எதிரானது.

மேலும் அல்லாஹ் 9:36,37 வசனங்களின் அடிப்படையில் மாதங்களை இது போன்று முன்னும் பின்னும் ஆக்குவதெல்லாம் இறை நிராகரிப்பு என தெளிவாக்கி விட்டதால் நாம் உலகில் நடைமுறையில் இருக்கும் இது போன்ற நாட்காட்டிகளை புறக்கணித்தே ஆக வேண்டும். புறக்கணிக்காவிட்டால் நாமும் இறை நிராகரிபிற்கு உள்ளாவோம் என்பதை மனதில் வைத்து ஆய்வு செய்ய வேண்டியது கடமை.

இந்த அடிப்படையில் நாம் இஸ்லாமிய நாட்காட்டியான ஹிஜ்ரா நாட்காட்டியை தான் பின்பற்றியே ஆகவேண்டும் என்ற நிர்பந்தத்தில் இருக்கிறோம் என்பதை தயவு செய்து மறந்து விடாமல் கணிக்கப்பட்ட ஹிஜ்ரா நாட்காட்டியை வைத்து தினமும் சந்திரனின் படிதரங்களை உரசி பார்த்தால் உண்மை விரைவாக மக்களிடம் சென்றடையும். இன்று நிராகரிப்பில் இருக்கும் மக்களையும் இதன் மூலம் நாம் காப்பாற்றிக்கொள்ளலாம்.

**மேலும் 1427 வது வருடத்தின் ஷ·:பான் மாதம் முதல் நாள் வியாழக்கிழமை (24.08.2006) ஆரம்பித்தது. மாதத்தின் நடுப்பகுதியான ஷ·:பான் 15 வியாழக்கிழமை (7–09–2006) சந்திரகிரகணம் ஏற்பட்டது. 1427 ஷ·:பான் மாதம் முடிவதை சந்தேகத்திற்கு இடமில்லாமல் தெளிவாக முடிவு செய்யும் ஒரு அத்தாட்சியாக இந்த மாதத்தின் 30வது நாளான வெள்ளிக்கிழமை அன்று (22.09.2006) சூரியகிரகணமும் ஏற்பட உள்ளது. எனவே 1427 ரமளான் மாதம் சந்தேகத்திற்கு இடமில்லாமல் திருக்குர்ஆனின் 55:5 வசனத்தின் அடிப்படையில் சனிக்கிழமை (23.09.2006) துவங்குகிறது. கணக்கின் அடிப்படையில் 1427 வது வருடத்தின் ரமளான் மாதம் ஞாயிற்றுகிழமையுடன் (22.10.2006) 30 நாட்களாக முடிவு பெறுகிறது. எனவே வருகிற 1427 ஷவ்வால் மாதத்தின் முதல் அதாவது நோன்பு ஹராமாக்கப்பட்ட நாளான பெருநாள் தினம் திங்கள்கிழமை (23.10.2006) திங்கள் கிழமை ஆகும்.** அல்லாஹ் ஞானமிக்கவன்.

தொகுப்புரை
பி.முகமது சிராஜூதீன்

தகவல் முகவரி:
இஸ்லாமிய ஆய்வு மற்றும் வெளியீட்டு மையம்
160/101, வடக்கு மெயின் ரோடு,
ஏர்வாடி – 627 103
தமிழ்நாடு
தொலைபேசி எண்: 04637 320777